கவனிக்க.– 06.06.2025 ஆந் திகதிய 2440 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2441 - 2025 ජූනි මස 13 වැනි සිකුරාදා - 2025.06.13

2441 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 214 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 222 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மானியக் கடிதம் இரத்து - அறிவிப்பு (பிரிவு 104) இதற்கான அறிவிப்பு**

எஹலியகொட சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் அகல்யாகொட பிரதேச செயலாளர் பிரிவு பிரதேச செயலாளர் எஸ். ஏ. தில்ருக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் அங்கம் வகிக்கின்றார் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் 1998.12.28 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதியால் வழங்கப்பட்டது No. Ratha/Q/45907 மானியக் கடிதத்தின் உரிமையாளரான சேமிக்க வசிக்கும் கொக்கோவிடா ஒமட்டகே சுவர்ணலதா இந்த மானியக் கடிதம் வழங்கப்பட்டதுமானியக் கடிதத்தின் உரிமையாளரான இந்த மானியக் கடிதம் வழங்கப்பட்டது. V28/127 ஆம் இலக்கத்தின் கீழ் அவிசாவளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 18.01.1999 அன்று வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் வாரிசாக இருக்க சட்டப்பூர்வ உரிமையாளர் அல்லது உரிமை இல்லாததால் வாரிசுக்கு யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வாரிசாக யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் அவர்/ அவள் வாரிசாக இருக்க விரும்பவில்லை மேற்படி சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் கொடுப்பனவை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை நான் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அது 2025.07.04 ஆந் தேதிக்கு முன் நீங்கள் எனக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தின் அஹல்யகொட பிரதேச செயலகப் பிரிவில் குருவிட்ட கோரளையின் தோரணகொட கிராம அலுவலர் பிரிவில் பேருவன கிராமத்தில் அமைந்துள்ள கடைசி கிராம இலக்கம் 702, இலக்கத்தின் 36 ஆம் இலக்கத்தில் 120 ஆம் இலக்க காணி இலக்கம் 72/132, காணி பேருவனவத்தை 18 ஹெக்டேருக்கு 00 ஹெக்.00 ரூ.00 என மதிப்பிடப்பட்டுள்ளது. எண் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வடக்கு : தொகுதி எண் 83, 121;
கிழக்கு : தொகுதி எண் 121;
தெற்கு : குறள் எண் 119, 136 மற்றும் அணுகல் வரி;
மேற்கு : லாட் எண் 136, 119.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்,
எஹெலியகொடை.

2025, சனவரி 16.

06 - 34

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்புகளை பிரிவு 104 இன் கீழ் இரத்து செய்தல்**

அதி உத்தம சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவுக்கேற்ப 1940 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 04 ஆம் திகதி பட்டியகும்புர இல் வசிக்கும் பேருவலராலலாகே ரொபட் சாவி என்பவருக்கு B 106 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்டு பதுளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1940.11.19 ஆம் திகதி LDO/5851/1940 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/ இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என ஊவா மாகாணசபைக்குட்பட்ட எல்ல பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் எல்ல

பதிரனலாகே இந்திக கயான் பதிரன ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2025.07.04 க்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 7 ஆம் இலக்க மற்றும் 7A ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் அளவை நாயகத்தினால் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 3 இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட - இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 12P எனக் காட்டப்பட்டுள்ளதும், பதுளை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட எல்ல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கும்பல்வெல பற்று/ கோரளையிலுள்ள யடிகிந்த (இடமேகம) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த யஹலமடித்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - ஹெக்டயர் 01 ஏக்கர் - றூட் 05 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு:-

வடக்கு : க்ரான்ட் ஆவணத்தில் எல்லைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை;
கிழக்கு : க்ரான்ட் ஆவணத்தில் எல்லைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை;
தெற்கு : க்ரான்ட் ஆவணத்தில் எல்லைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை;
மேற்கு : க்ரான்ட் ஆவணத்தில் எல்லைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்திக கயான் பதிரன,
பிரதேச செயலாளர்,
எல்ல.

2025, பெப்புருவரி 11.

06 - 35

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்பு பத்திரத்தை இரத்து செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

மேல்மாகாண சபை, கம்பஹா மாவட்ட மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யூ. டபிள்யூ. ரி. யூ. ராஜகருணா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1984.10.16 ஆந் திகதி கம்/பிர/3048 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்பு பத்திரம், இல. 48 கோப்பிவத்தை மினுவங்கொடையைச் சேர்ந்த செய்யது லெப்பை மொஹொமட் முஸ்தபா என்பவருக்கு வழங்கப்பட்டு, கம்பஹா மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் மீக/மினு/01/31 என்ற இலக்கத்தின் கீழ் 1985.06.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள, பின்வரும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம்/ பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.07.04 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலமாக அறியத் தரவும்.

**அட்டவணை**

மேல்மாகாண கம்பஹா நிருவாக மாவட்ட மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் காசியபத்துவ 123 யட்டியன கிராம சேவகர் பிரிவில் யட்டியன என்ற ஊரில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. எல் 7/21 என்ற களப்பத்திரத்தில்/ நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட மு. பி. கம். 426 என்ற இலக்கத்தைக் கொண்ட காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில் இல. 134 ஆம்

காணித்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 0.010 ஹெக்டயார் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள கோப்பிவத்தை என்ற அரச காணி.

வடக்கு : காணித்துண்டு இல. 78 2/2;
கிழக்கு : பிரவேச வழி;
தெற்கு : பிரவேச வழி;
மேற்கு : காணித் துண்டு இல. 52.

யூ. டபிள்யூ. ரீ. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை.

பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை,
2025, பெப்புருவரி 07.

06 - 36/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்பு பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

மேல்மாகாண சபை, கம்பஹா மாவட்ட மீரிகமை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே/ டப்ளிவ் பி. பிரசாத் இந்திக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1996.12.10 ஆந் திகதி கம்/பிர/மீரி/1545 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்பு பத்திரம் ஹந்துருமுல்லை மீரிகமை என்ற இடத்தைச் சேர்ந்த ஜயசிங்க ஆரச்சிலாகே விமலசேன என்பவருக்கு வழங்கப்பட்டு நீர்கொழும்பு மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் மீக/மீரி/10/276 என்ற இலக்கத்தின் கீழ் 1997.09.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக் காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை என்று கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.07.04 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலமாக அறியத் தரவும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாக மாவட்டம் மீரிகமை பிரதேச செயலகப் பிரிவு உடகஹ பத்துவ/ கோரளை 15 ஏ ஹந்துருமுல்லை கிராம அலுவலர் பிரிவில் ஹந்துருமுல்லை என்ற ஊரில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. - என்ற களப் பத்திரத்தில்/ - அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. எப். எஸ். பீ. பீ. 68 என்ற காணிப்பிரித்தெடுப்பு களப் பத்திரத்தில்/ - அவர்களால் தயாரிக்கப்பட்ட 211 ஆம் இலக்க காணித்துண்டாக குறித்துக் காட்டப்பட்டுள்ள 0 றூட் 18 1/2 பேர்ஸ் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள அரச காணி.

வடக்கு : கொரனேரிஸ் அப்புஹாமி என்பவரின் காணி;
கிழக்கு : வயல்;
தெற்கு : சந்தரரத்ன என்பவரின் காணி;
மேற்கு : பல் மட வீதி.

டபிள்யூ. பீ. பிரசாத் இந்திக,
பிரதேச செயலாளர்,
மீரிகமை.

பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை,
2025, சனவரி 18.

06 - 36/2

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 19 ஆம் இலக்க பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழங்குதல் பத்திரத்தை அழித்தல் (104 ஆம் பிரிவு) பற்றிய அறிவித்தல்**

மேல் மாகாண சபையின் கம்பஹா மாவட்டம் மீரிகமை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளரான டபிளியு. பீ. பிரசாத் இந்திக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) உப பிரிவின் கீழ் மேன்மை தாங்கிய சனாதிபதி அவர்களால் 1995.11.11 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் கம்/பிர/மீரி/1264 கொண்ட வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான மாளிகாதென்னையில் வசிக்கும் சுபசிங்க ஆரச்சிளாகே சிங்சி நோனா என்பவருக்கு வழங்கிய கம்பஹா பதிவாளர் அலுவலகத்தில் இல. LDO 8B/106 இன் கீழ் 1995.11.11 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டபூர்வ உரிமையுள்ள ஒருவர் இல்லாமையினால் அல்லது உரிமையுள்ள ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமையளராவற்கு விரும்பாதபடியால் பின்னுரிமைத்துவத்திற்கு எவரும் இல்லையென அறிவிக்கப் பட்டுள்ளமையினால் மேற்கூறப்பட்ட வழங்கள் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இல்லாதாக்குவதற்கான நடவடிகக்கைள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பான மறுப்பு இருப்பின் அதை 2025.07.04 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரல் வேண்டும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாக மாவட்டத்தின் மீரிகமை பிரதேச செயலாளர் பிரிவின் மெதபத்து கோரளை 337 பீ மாளிகாதென்ன கிராம அலுவலர் தொகுதியின் வதுரவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே ஜனரால் பொறுப்பிலுள்ள மற்றும் சர்வே ஜனராலினால் ஆக்கப்பட்ட இலக்கம் ............. கொண்ட வரைபடத்தில் 60/1/3 (L/14) ஆல் ஆக்கப்பட்ட இலக்கம் மு. பீ. கம் 1341 துண்டாடல் வரைபடத்தில் ........... ஆல் ஆக்கப்பட்ட டயக்ராம் படத்தில் இலக்கம் 11 ஆம் நிலப்பகுதியாக காணப்படும் மற்றும் அளவில் ஹெக்டயார்/ ஏக்கர் 0.160 றூட் ........ பேர்ச் ................ விசாலமான கீழ்க் காணப்படும் எல்லைக்குட்படும் அரச காணி:

வடக்கு : இலக்கம் 10 மற்றும் 9 எனும் நிலப் பகுதிகள்;
கிழக்கு : இலக்கம் 9 மற்றும் 14 எனும் நிலப் பகுதிகள்;
தெற்கு : இலக்கம் 14 மற்றும் 20 எனும் நிலப் பகுதிகள்;
மேற்கு : இலக்கம் 20 மற்றும் 10 எனும் நிலப் பகுதிகள்

டப்ளியூ. பீ. பிரசாத் இந்திக்க,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

பிரதேச செயலாளர்,
மீரிகம,
2025, பெப்புருவரி 01.

06 - 36/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் பிரிவு 19 இன் 04 ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட நில உரிமைப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான அறிவிப்பு (பிரிவு 104)**

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், திரப்பன பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாண ரீதியான கே. பீ. கே. எல். பீ. மதுவந்தி ஆகிய நான், 1996.05.20 அதிமேதகு சனாதிபதி அவர்களால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் பிரிவு 19 இன் 04 வது உப பிரிவின் படி அனு/திர/பிர 1568 இலக்கத்தைக்கொண்ட, கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள முறியகல்லவை வசிப்பிடமாகக்கொண்ட திரு. ஜயதிலக அதிகாரி ஜயசேன பண்டார என்பவருக்கு வழங்கப்பட்டு அநுராதபுர மாவட்ட காணிப் பதிவாளர் காரியாலயத்தில் 281/132 இலக்கத்தின் கீழ் 1997.12.26 அன்று பதிவு செய்யப்பட்ட நில உரிமைப் பத்திரம் தொடர்பாக இந்த அறிவிப்பை வெளியிடுகின்றேன். குறித்த காணிக்கான சட்டப்படியான வாரிசு இல்லை என்றும்,

உரிமையுள்ள ஒரு வாரிசு உள்ளார் எனினும் அவர் உரிமைக் கோர விரும்பவில்லை என்பது கண்டறியப்பட்டமையால், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 வது பிரிவின்படி, மேற்கூறிய உரிமைப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை நான் இதன் மூலம் அறிவிப்புச் செய்கின்றேன். இந்த இரத்து தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அதனை 2025.07.04 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுர நிருவாக மாவட்டத்தில், உலகல்ல பற்று/ கோரளை, இல. 529 பெரிமியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் திரப்பன பிரதேச செயலாளர் பிரிவில் முறிகல்ல கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க காணி ............ காணி எண் .......... காணி அளவையாளரால் அளவீடு செய்யப்பட்ட நில அளவைப் பத்திர இல : 1281 உடைய, ஹெக்டேர்/ ஏக்கர் ஒன்று மற்றும் றூட்: ........ பேர்ச் .................. உடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணி.

வடக்கு : வன்னிஹாமிகே சமரதாசவின் நிலம்;
கிழக்கு : சந்திரசேகர கபுருபந்த திலகரத்னவின் நிலம்;
தெற்கு : யகல்ல பாதை ஒதுக்கப்பட்ட நிலம்;
மேற்கு : கரில குமாரசேகர திலகரத்னவினால் கோரப்பட்டுள்ள காணி.

கே. பீ. கே. எல். பீ. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
திரப்பனே.

பிரதேச செயலாளர்,
திரப்பனே,
2025, பெப்புருவரி 01.

06 - 37/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் மானிய வெளியீட்டை இரத்து செய்வற்கான அறிவிப்பு**

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்) எல். பி. மியுரி. பிரியதர்சினி ஆகிய நான், நில மேம்பாட்டு கட்டளைச்சட்டத்தின் பிரிவு 19 (4) உப பந்தியின் கீழ் அதிமேகு சனாதிபதி அவர்களால் 1996 திசெம்பர் 06 ஆம் திகதி அன்று வழங்கி வைக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 3351 கொண்ட உரித்துப் பத்திரத்தின் சொந்தக்காரரான பலாகல ஹபரத்தாவல இல் வசிக்கும் ரமுக்கெட்டே கெதர அய்ரங்கனி அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்ட பதிவாளர் காரியாலலத்தில் இலக்கம் 431/103 இன் கீழ் 2021 செத்தெம்பர் 13 ஆம் திகதி அன்று பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு சட்ட ரீதியான உரிமை உள்ள ஒருவராக இல்லாதவிடத்து அல்லது பதில் உரிமையாளர் ஒருவர் ஆவதற்கு உரிமை இருந்தும், அவர் அதற்கு விருப்பமில்லாத விடத்து பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால் அந்த உரித்துப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 வது உப பந்தியின் கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது, என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2025.07.04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கபபடுகின்றது.

**அட்டவணை**

அநுராதபுர நிருவாக மாவட்டத்தில், பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம் பத்து/ கோரள இல. 659, ஆனகட்டாவெவ கிராம அலுவலர் பிரிவில் ஹபரத்தாவல எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள ............ என்பவரின் பொறுப்பில் நில அளவையாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் 93 கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் பதியப்பட்ட இலக்கம் - ஐ கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ 1156 (4/1156) ........ ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் ............. கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் ஹெக்டயார்/ ஏக்கர் 0.700 றூட் ........ பேர்ச் ............ என அளவைக் கொண்ட கீழ் காணப்படுகின்றவரான எல்லைகளை கொண்ட இடமானது அரச காணி.

வடக்கு : சீலரத்னவின் இடம்;
கிழக்கு : பீ. கருணாரத்னவின் இடம்;
தெற்கு : பீ. கருணாரத்ன மற்றும் என். பி. ஜயசிங்கவின் இடம்;
மேற்கு : என். பி. ஜயசிங்க மற்றும் சீலரத்னவின் இடம்.

எல். ஜி. எம். பிரியதர்ஷனி,
பிரதேச செயலாளர்,
பலாகல.

2024, பெப்புருவரி 27.

06 - 37/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய பீ. ஏ. சிதாரி உதயங்கனீ ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி மேதகு சனாதிபதி அவர்களால் 1987.08.10 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள களு/பிர/9608 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மஹந்தி ஆச்சாரிகே ஹரமானிஸ்ஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மத்துகமை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ 22/76 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.03.11 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறிவித்தல் செய்கிறேன். இது தொடர்பாக எதிர்ப்பு இருபின் அவற்றை 2025.07.04 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

களுத்துறை நிர்வாக மாவட்டத்தின் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் கங்கபட பற்றில்/ கோறளையிலுள்ள 819ஏ- மஹகம தெற்கு (திருத்தப்பட்ட 819சீ மஹகம தெற்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மஹகம தெற்கு (திருத்தப்பட்ட மஹகம மேற்கு) எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அ. க. சி. 134 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ ............ என்பவரால் தயாரிக்கப்பட்டு .............. ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் .............. என்பவரால் தயாரிக்கப்பட்ட இரேகை வரைதலில் 946 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார்/ ஏக்கர் 01 றூட் 00 பேர்ச் 05 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு; அம்பகஹ ஹேன

வடக்கு : அ. க. பி. 134 லொட் 945, 888;
கிழக்கு : அ. க. பி. 134 லொட் 414;
தெற்கு : அ. க. பி. 134 லொட் 415;
மேற்கு : அ. க. பி. 134 லொட் 947.

பீ. ஏ. சிதாரி உதயங்கனீ,
பதில் பிரதேச செயலாளர்,
புலத்சிங்கள.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
புலத்சிங்கள,
2025, மாச்சு 05.

06 - 62

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் இலக்க பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் (104 ஆம் பிரிவு)**

மேல் மாகாணகம், கம்பஹா மாவட்டம், தொம்பெ பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். நிஷ்ஷங்கஆரச்சி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1984.10.19 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ගම්/පු/5112 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மஹவலவத்த வசிக்கும் ஹப்புகொட ஆரச்சிகே டேவிட் சிஞ்ஞோ என்பவருக்கு வழங்கப்பட்டு, கம்பஹா மாவட்ட பதிவாளர் அலுவாளர் அலுவலகத்தில் L. D. O. 6/316 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.04.29 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டபூர்வமாக உரித்துக் கோரக்கூடிய ஒருவர் இல்லாமை அல்லது உரித்துக் கோரக்கூடிய ஒருவர் இருக்கின்ற போதிலும் அலர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாமை காரணமாக பின்னுரிமையாளராவதற்கு எவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டுள்ளதால், அவ் அளிப்புப் பத்திரத்தை மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.07.04 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாக மாவட்டத்தின், தொம்பெ பிரதேச செயலாளர் பிரிவின், கங்கபொட பத்துவையில் இல. 417 - தித்தபத்தர கிராம அலுலவர் பிரிவில், தித்தபத்தர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ளதும் நில அளவையாளர் நாயத்தினால் தயாரிக்கப்பட்டதுமான எல்12/7 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. இல. ගම්: 598 இல் துண்டு இல. 56 எனக் காட்டப்பட்டதும் 0.104 ஹெக், 00 றூட் விஸ்தீரணமுடையதுமான கீழ்க் காணும் எல்லைகளுள் அமைந்த அரச காணி: மஹவலவத்த

வடக்கு : குடியேற்ற வீதி;
கிழக்கு : துண்டு இல. 55;
தெற்கு : துண்டு இல. 75;
மேற்கு : துண்டு இல. 57.

என். ஏ. ஏ. எஸ். நிஷ்ஷங்கஆரச்சி,
பிரதேச செயலாளர்,
தொம்பெ.

2025, மாச்சு 25.

06 - 72/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மீரிகமை பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே) டப்ளிவ். பீ. பிரசாந்த் இந்திக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1985.02.08 ஆந் திகதி இல. கம்/பிர/7877 என்ற வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான கிரிந்திவலையைச் சேர்ந்த ஹேவா ஜேடிகே பப்ளிஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டு நீர்கொழும்பு மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இல. மீக/மீரி/2/200 இன் கீழ் 1986.07.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு பின் உரித்தாளியாவதற்கு சட்டரீதியான உரிமையாளர் ஒருவர் இல்லாதிருப்பதால் அல்லது உரிமை கோருவதற்கு ஆள் இருந்தும் அவர் சட்டரீதியான பின் உரித்தாளியாவதற்கு விரும்பாததால் பின் உரித்தாளி ஒருவர் இல்லாதிருப்பதாக அறியப்படுவதால் மேற்குறிப்பிட்ட வழங்கல் பத்திரம் மேற்படி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அதனை 2025.07.04 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாகம மாவட்ட மீரகமை பிரதேச செயலகப்பிரிவில் உடுகஹபத்துவை கோரளை 16 ஏ ஹுலுகமை கிராம அலுவலர் பிரிவில் கிரிந்திவலை என்ற ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவை நாயககத்தால் தயாரிக்கப்பட்ட இல. 53/ 22/1/3 என்ற களப்பத்திரத்தில்/ மு. பி. கம் 531 என்ற காணித் துண்டுகள் காணிப் பொழிப்பில்/ இல. 62 என்ற காணித் துண்டு பரப்பளவில் 0.152 ஹெக்டயார்/ ஏக்கர் ....../ரூட் ......./பேர்ச் ....... கொண்ட பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணி ஆகும்.

காணியின் பெயர் : மிரிகன் கந்த

வடக்கு : உட்பிரவேச வழி;
கிழக்கு : உட்பிரவேச வழி;
தெற்கு : ஓடை;
மேற்கு : காணித் துண்டு இலக்கம் 65.

டப்ளிவ். பீ. பிரசாந்த் இந்திக்க,
பிரதேச செயலாளர்,
மீரிகமை.

2021, யூன் 04.

06 - 72/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104) ஆம் பிரிவு தொடர்பாக அறிவித்தல்**

தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள முலட்டியான பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர்/ மேலதிக காணி ஆணையாளர் (உள் மாகாண) வின்தியா. டி. சமரக்கொடி ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1982.05.18 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/பிர/ 3466 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் கீழ் உரிமையாளரான தேவாலகம எனும் முகவரியில் வசிக்கும் அரம்பகே பேபிஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO 5175 ஆம் இலக்கத்தின் கீழ் 1996 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.07.04 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை நிருவாக மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் கந்தபட பத்துவ பிராந்திய வருமான வரி உத்தியோகத்தர் பிரிவின் கந்தபட பத்துவ தேவாலகம கிராம அலுவலர் பிரிவின் தேவாலகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. கி. பட. இலக்கம் 165 படத்தில் துண்டு இலக்கங்கள் 13 ஏயூ 11 எனும் காணித்துண்டுகளாக குறித்திருக்கும் காணித்துண்டின் விஸ்தீரணம் சுமார் 00 ஏ. 03 றூட் 38 பேர்சர்ஸ் கொண்ட கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. மெதமண்டியஹேன

வடக்கு : ஆரம்ப கிராமப் பட 165 இல் இலக்கம் 13 ஏயூ 9 காணித்துண்டு;
கிழக்கு : ஆரம்ப கிராமப் பட 165 இல் இலக்கம் 13 ஏயூ 14, 13 ஏயூபி காணித்துண்டு;
தெற்கு : ஆரம்ப கிராமப் பட 165 இல் இலக்கம் 13 ஏயூ 12 காணித்துண்டு;
மேற்கு : ஆரம்ப கிராமப் பட165/13 ஏஎஸ்.

வின்தியா டி. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன

2024, யூலை 18.

06 - 73

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/75282.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/EPR/26.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 186/A, வேப்பவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவின் வேப்பவெட்டுவான் கிராமத்தில், காணி அலுவலரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம்: 1 மற்றும் 2 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 05 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரசாங்க காணியை விவசாய (நெற் பயிர்ச் செய்கை) நோக்கத்திற்காக திருமதி ரமணி சவிந்தனந்தன் என்பவர் குத்தகைக்கு கோரியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: S. சிவபாக்கியம்;
கிழக்கு: P. கணபதிப்பிள்ளை;
தெற்கு: T. தங்கராசா;
மேற்கு: M. மகேஸ்வரன்.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் அங்கீகரித்த திகதி முதல் முன்னோக்கி முப்பது வருடங்கள்) (2025.04.10)

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை : கௌரவ அமைச்சர் அங்கீகரிக்கின்ற ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும். குத்தகை நடைமுறைப்படுத்தப்படும் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள், குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.04.10 ஆம் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னரும் இந்தக் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்திற்கு மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா. எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம்
"மிஹிகத்த மெதுர",
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, மே 19.

06 - 38

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78324.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/PLC/L10/AM/LTL/08.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 651/A, லபுகலை கிராம அலுவலர் பிரிவின் லபுகலை கிராமத்தில், நில அளவையாளர் ரீ. பீ. எஸ். சன்கரன்தெனிய அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 21109 - A ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இல.: 1 இனால் காண்பிக்கப்பட்டுள்ள ஏக்கர் : 07, ரூட்: 01, பரச்சஸ்: 08 பரப்பளவு கொண்ட அரசாங்க காணியை தென்னை, பழ வகைகள் மற்றும் மரக்கறி வகைகள் உள்ளிட்ட கலப்புப் பயிர்கள் பண்ணை விவசாய நோக்கத்திற்காக திரு. வல்கம ஆரச்சிகே சமிந்த தீபால் ரணசிங்க என்பவர் குத்தகைக்கு கோரியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: பாதை மற்று் எச். எம். பிரதீப் அஷோக்க என்பவரின் காணி;
கிழக்கு: சரத் என்பவரின் காணி மற்றும் யூ. எல். ஆர். பெரேரா என்பவரின் மற்றும் ஏனைய காணிகள்;
தெற்கு: பிரதேச சபை பாதை, ஷந்தி மற்றும் ஜயந்த ஆகியோரின் காணி;
